இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 247 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 04 – வியாழக்கிழமை 17 ஏப்ரல் 2025 – வெளியூர் 12 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 83 - Issue 247 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 04 - Thursday 17 April 2025 - Dak 12 Pages ₹ 5.00

### சமூக நீதியை அடைவதற்கான மற்றும் ஓர் முன்னெடுப்பு – ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்ட முன்வடிவை தாக்கல் செய்து பெருமிதம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.4.2025) சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நேரடியாக தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உறுப்பினராக வகைசெய்யும் அரசினர் (திருத்தச்) சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்து உரையாற்றினார்.

**சென்னை, ஏப். 17 -**

**தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நேரடியாக தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உறுப்பினராக வகைசெய்யும் அரசினர் (திருத்தச்) சட்டமுன்வடிவுகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகம் செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லார்க்கும் எல்லாம் என்ற பரந்த உள்ளத்தோடு, திறந்த மனதோடு செயல்பட்டு வருகிற அரசு, இந்த திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் திட்டமாக இருந்தாலும், அது மனிதர்களுடைய மனதையும் மகிழ்விக்க வேண்டும்; முகத்தில் புன்னகையையும் வரவைக்க வேண்டுமென்று நினைக்கின்றவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத்துறைவளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி, அனைத்து மக்கள் வளர்ச்சி என்ற நான்கு சொற்களுக்குள் எல்லாம் அடங்கியிருக்கிறது. அதைத்தான் ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்று சொல்கிறோம்.

**எனது ஒவ்வொரு கையெழுத்தும் விளிம்பு நிலை மக்களை உயர்த்தும்!**

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பெண்கள், விளிம்பு நிலை மக்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர் என்று ‘குரலற்றவர்களின் குரலாக’ திராவிட மாடல் ஆட்சி இருக்க வேண்டுமென்றுதான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். என்னுடைய ஒவ்வொரு கையெழுத்தும் அவர்களுடைய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அடித்தளமாக அமைய வேண்டுமென்று நினைக்கின்றேன். அந்த வகையில், இன்றைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாக அமைந்திருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளின் நலனில் அக்கறையுடன் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிற திராவிட மாடல் அரசு, இன்றைக்கு நாம் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு சட்டமுன்வடிவுகளை அறிமுகப்படுத்தப் போகிறோம்.

**மாற்றுத்திறனாளிகள் என்ற சொல்லை உருவாக்கியவர் கலைஞர்!**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள்தான் “மாற்றுத்திறனாளிகள்” என்ற சொல்லை முதன் முதலாகப் பரிவோடு உருவாக்கினார். அதே அக்கறையோடுதான் நானும் அந்தத் துறையைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு, இந்தத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 667 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், இப்போது, இந்த நிதியாண்டில் ஆயிரத்தி 432 கோடியாக, அதாவது ரெண்டு மடங்கு உயர்த்தி இருக்கோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கான மானியக் கோரிக்கை விவாதிக்கப்பட இருக்கிறது.

**இந்தியாவிலேயே அதிக மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி!**

மாற்றுத்திறனாளிகளுக்கு கருணை அடிப்படையில் மட்டுமல்ல; உரிமை அடிப்படையில் நாம் திட்டங்களைத் தீட்டி வழங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே, அதிக எண்ணிக்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்குகிற மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான்.

> **“இந்தச் சட்டத் திருத்தத்தினால் விளையப் போகும் பலன் பற்றி ஒரு விவரத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். தற்போது நகர்ப்புற உள்ளாட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் 35 பேர் மட்டுமே மாற்றுத்திறனாளிகள் ஆவார்கள். ஆனால், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, சுமார் 650 மாற்றுத் திறனாளிகள் நகர்ப்புற உள்ளாட்சிகளிலும், (மேசையைத் தட்டும் ஒலி) 12,913 மாற்றுத் திறனாளிகள் கிராமப் பஞ்சாயத்துக்களிலும், (மேசையைத் தட்டும் ஒலி) 388 மாற்றுத் திறனாளிகள் ஊராட்சி ஒன்றியங்களிலும், (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட ஊராட்சிகளில் 37 மாற்றுத் திறனாளிகளும் நியமனம் செய்யப் படுவார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). அவர்களது குரல் அந்த உள்ளாட்சி அமைப்புகளில் எல்லாம் எதிரொலிக்கும். இது இந்தச் சட்டத்தினால் விளையப்போகும் மிகப் பெரிய நன்மை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.”**

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - சுதந்திரப் போராட்ட வீரர்

# தீரன் சின்னமலை சிலைக்கு மரியாதை செலுத்துகிறார்!

## இன்று கிண்டி – திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் நிகழ்ச்சி!

**சென்னை, ஏப். 17 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த ஏப்ரல் 17ஆம் நாள் காலை 9.30 மணியளவில், தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள அவருடைய திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.**

தீரன் சின்னமலை அவர்கள் ஈரோடு மாவட்டம் காங்கேயம் அருகில் மேலப்பாளையம் எனும் சிற்றூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் தீர்த்தகிரி. தீரன் சின்னமலை அவர்கள் இளம் வயதிலேயே போர்க்கலைகளான வாள் பயிற்சி, வில் பயிற்சி, சிலம்பாட்டம், மல்யுத்தம், தடிவரிசை போன்றவற்றைக் கற்றுத் தேர்ந்து சிறந்த இளம் வீரராகத் திகழ்ந்தார்.

வீரம் செறிந்த பல்வகைப் போர்க்கலைகளையும் கற்றுத் தேர்ந்து, போர்த் தந்திரங்களில் தனது படைகளுக்கும் பயிற்சிகள் அளித்தார். இந்திய விடுதலைப் போரில் பங்கேற்று ஆங்கிலேயர்களுக்குச் சவால் விட்டு அவர்களின் கிழக்கிந்தியக் கம்பெனியை அடியோடு ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

கொங்கு மண்ணில், அன்றைய மைசூர் அரசு வசூலித்த வரியைத் தடுத்து நிறுத்தியதால், “சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையே ஒரு சின்னமலை” என்று பெயர் பெற்றார்.

அதன்பின் ஆங்கிலேயர்கள் தீரன் சின்னமலையை அழிக்க முயன்று 1801இல் காவிரிக் கரையிலும் 1802இல் ஓடாநிலையிலும், 1804இல் அரச்சலூரிலும் ஆக மூன்று முறை போர் நடத்தியும் அவர்கள் தோற்றனர். ஓடாநிலைப் போரில் ஆங்கிலக் கம்பெனித் தளபதி மேக்ஸ்வெல் கொல்லப்பட்டார். பின்னர், ஆங்கிலேயர்களின் சூழ்ச்சியால், சமையல்காரனால் காட்டிக் கொடுக்கப்பட்டு சின்னமலை கைது செய்யப்பட்டார். பின், அவர் 31.7.1805 அன்று சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தம் ஆட்சிக் காலத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களுக்குப் பெருமைச் சேர்க்கின்ற வகையில், சென்னை, கிண்டியில் அவருடைய திருவுருவச்சிலையை நிறுவி 4.10.1998 அன்று தம் பொற்கரங்களால் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசின் சார்பில், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நடைபெறும் இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

### சென்னை சுற்றுவட்டாரப் பகுதிகளில்

# பலத்த காற்றுடன் பரவலாக மழை!

*சென்னை, ஏப். 17 -*

சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று காலை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

புறநகர்ப் பகுதிகளில் பலத்த சூறைக்காற்றும் வீசியது. கடந்த சில நாட்களாக கொளுத்திய கோடை வெப்பத்திலிருந்து விடுபட்டு சென்னைவாசிகள் சற்றே ஆறுதல் அடைந்துள்ளனர். சென்னையில் பிற்பகல் ஒரு மணி வரை லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்தது.

சென்னையில் கோடை வெயில் வாட்டி வந்த நிலையில் திடீர் வானிலை மாற்றம் ஏற்பட்டு, ஆங்காங்கே கனமழை பெய்து வருகிறது.

சென்னை கோயம்பேடு வளசரவாக்கம், கிண்டி, அசோக் நகர், போரூர், மதுரவாயல், ஆயிரம் விளக்கு, வானகரம், சைதாப்பேட்டை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று காலை முதலே மிதமான மழை பெய்து வருகிறது.

தற்போது குளிர்ச்சியான சூழல் நிலவுவதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இருப்பினும் ஆங்காங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதால் வாகன ஓட்டிகள் சிரமத்தை மேற்கொள்கின்றனர்.

ஆவடியில் மழையுடன் சூறைக்காற்றும் வீசியதால் வாகன ஓட்டிகள் அவதி அடைந்தனர்.

ஆவடியில் பலத்த காற்று வீசி வரும் நிலையில், விளம்பரப் பதாகை கிழிந்து மின் கம்பிகள் மீது விழுந்தது. இதனால் அப்பகுதி முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

சென்னையில் பிற்பகல் ஒரு மணி வரை லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்தது.

சென்னை போலவே செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் மிதமான மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### கல்வி நிறுவனங்களின் பெயர்களில் இடம் பெற்றுள்ள

# ஜாதிப் பெயர்களை 4 வாரங்களில் நீக்க வேண்டும்!

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

*சென்னை, ஏப் 17 -*

கல்வி நிறுவனங்களின் பெயர்களில் இடம் பெற்றுள்ள ஜாதி பெயர்களை 4 வாரங்களில் நீக்க வேண்டும் என சென்னை உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை நிர்வகிக்க சிறப்பு அதிகாரியை நியமித்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் ஜாதியை ஊக்கப்படுத்த கூடிய சங்கங்களை சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்ய முடியுமா? அந்த சங்கங்களின் சார்பில் நடத்தப்பட கூடிய கல்வி நிறுவனங்களின் பெயர்களின் சாதி பெயர்களை நீக்க முடியுமா என்பது குறித்து விளக்க அளிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பரதசக்கரவர்த்தி நேற்று தீர்ப்பு வழங்கி உள்ளார். அதில், சங்கத்தின் பெயரில் உள்ள சாதி பெயரை நீக்கி சங்க சட்ட திட்டத்தில் திருத்தும் செய்து அரசை அணுக வேண்டும் என்று மனுதாரர் சங்கத்திற்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

மேலும் அந்த உத்தரவில்,

★ சாதிகளின் பெயரில் சங்கங்கள் பதிவு செய்யக் கூடாது என அனைத்து பதிவாளர்களுக்கும் சுற்றறிக்கை



பிறப்பிக்க வேண்டும் என்று பதிவுத்துறை ஐஜிக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

★ சாதி பெயர்களை திருத்தம் செய்யாத சங்கங்களை சட்டவிரோதமான சங்கங்கள் என அறிவித்து அவற்றின் பதிவை ரத்து செய்ய வேண்டும்.

★ ஜாதி சங்கங்களின் பெயர்களில் உள்ள ஜாதி பெயர்களை நீக்கி சட்ட திருத்தத்தில் திருத்தும் செய்ய கூடிய பணிகளை 3 மாதங்களுக்குள் துவங்கி 6 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று நீதிபதி அறிவுறுத்தினார்.

★ ஜாதி சங்கங்கள் நடத்த கூடிய பள்ளி, கல்லூரி உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் பெயர் பலகைகளில் உள்ள ஜாதி பெயர்கள் இடம் பெற கூடாது என உத்தரவிட நீதிபதி அந்த பெயர்களை 4 வாரங்களில் நீக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் கல்வி நிறுவனங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

★ அதே போல் அரசு நடத்த கூடிய கள்ளர் சீர்திருத்தப்பள்ளி, ஆதிதிராவிடர் நலன்பள்ளி போன்ற பெயர்களை மாற்றி அரசு பள்ளி என்று பெயர்சூட்ட வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி அந்த பள்ளியில் ஒரு வேலை நன்கொடையாளர்கள் யாரேனும் பெயர்கள் சூட்டப்பட்டால் அவர்களுடைய பெயர்கள் மட்டுமே இடம் பெற வேண்டும் என்றும் அவர்களுடைய ஜாதி பெயர் இடம் பெற கூடாது என்றும் நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.